பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
02 09 2024 **MONDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநிலங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்து தரும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. உத்தரபிரதேச மாநிலத்தில் 157 ரயில் நிலையங்கள் மறுசீரமைக்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
3. அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று சிகாகோவில் பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்தித்து பேசுகிறார்.
4. போரினால் பாதிக்கப்பட்டுள்ள காஸாவில் 6 லட்சத்திற்கும் அதிகமான குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் தொடங்கியுள்ளது.
5. பாரிஸ் பாராலிம்பிக்கில் மகளிருக்கான 200 மீட்டர் ஓட்டத்தில் ப்ரீத்தி பால் வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநிலங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்து தரும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நேற்று பிரதமர், ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு, தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி ஆகியோரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

அம்மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து அவர்களிடம் கேட்டறிந்தார்.

பலத்த மழை காரணமாக, தலைநகர் ஹைதராபாத் உட்பட தெலங்கானாவின் பல்வேறு மாவட்டங்களின் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

மழை தொடர்வதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தலைநகர் ஹைதராபாதில் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலத்தில் கடந்த இரண்டு நாட்களாக பெய்து வரும் கனமழையால், விஜயவாடா உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தாழ்வான பகுதிகளிலிருந்து 17 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர், மீட்கப்பட்டு, நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மீட்பு பணிகளில் தேசிய பேரிடர் மீட்புப் படையினரும், மாநில காவல்துறை மற்றும் தீயணைப்புத்துறையினரும் ஈடுபட்டுள்ளனர்.

மழை காரணமாக, ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால், ஆந்திரா மற்றும் தெலங்கானா வழியாக செல்லும் 99 ரயில் சேவைகளை, தென்-மத்திய ரயில்வே ரத்து செய்துள்ளது. 54 ரயில்கள் மாற்றுப்பாதையில் திருப்பிவிடப்பட்டுள்ளன.

>>>>>><<<<<<

பிஜேபி உறுப்பினர் சேர்க்கை நாடுமுழுவதும் இன்று தொடங்குகிறது.

புதுதில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, கட்சியின் தலைவர் திரு. ஜெபி. நட்டாவிடமிருந்து உறுப்பினர் புதுப்பித்தலுக்கான அட்டையை பெற்றுக்கொள்கிறார்.

பிஜேபி கட்சி விதிகளின்படி, ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை உறுப்பினர் அட்டை புதுப்பிக்கப்படுகிறது.

தற்போது உறுப்பினராக உள்ள அனைவரும் புதிதாக புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று அக்கட்சி கூறியுள்ளது.

இந்த உறுப்பினர் சேர்க்கை, நவம்பர் மாதம் 10ஆம் தேதி வரை பல்வேறு கட்டங்களாக நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

உத்தரபிரதேச மாநிலத்தில் 157 ரயில் நிலையங்கள் மறுசீரமைக்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

பிலிப்பெட் - மயிலானி இடையேயான புதிய ரயில் சேவையை தொடங்கி வைத்து பேசிய அவர், உத்தரபிரதேச மாநில ரயில்வே திட்டங்களுக்கான நிதி, இந்த ஆண்டு 18 மடங்கு உயர்த்தப்பட்டுள்ளதாக கூறினார்.

பிலிப்பெட் - ஷாகர் ரயில் நிலையங்களுக்கு இடையே 672 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய அகல ரயில் பாதையையும் அமைச்சர் தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

தன்பாலின ஈர்ப்பாளர்கள் குறித்து, கொள்கைகளை வகுக்க பொதுமக்களிடமிருந்து மத்திய அரசு கருத்துகளை கேட்டுள்ளது.

இந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் குறித்து விரிவான கொள்கைகளையும், திட்டங்களையும் வகுக்க, மத்திய அரசு கடந்த ஏப்ரல் மாதம் மத்திய அமைச்சரவைச் செயலர் தலைமையில் குழு ஒன்றை அமைத்தது.

இந்தக்குழு தன்பாலின ஈர்ப்பாளர்கள் நலன்களை பாதுகாக்க, மத்திய-மாநில அரசிடமிருந்து கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெற்று, பரிந்துரைக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே இடைக்கால ஏற்பாடாக அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய உணவு மற்றும் நுகர்பொருள் விநியோகத்துறை சில அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தது.

தன்பாலின ஈர்ப்பாளர்களை மற்றவர்களைப் போல் சமமாக கருதி, அவர்களுக்கு ரேஷன் அட்டைகளை வழங்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தன் பாலின ஈர்ப்பாளர்கள் கூட்டாக வங்கிக்கணக்கு தொடங்கும் போது அவற்றுக்கு எந்தவித தடைகளையும் விதிக்கக்கூடாது என்றும் வங்கிகளுக்கு மத்திய நிதித்துறை அறிவுறுத்தியுள்ளது.

இப்பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு சுகாதார வசதிகளை வழங்குவதிலும், விழிப்புணர்வை வழங்குவதிலும், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையிலும் தேவையான வசதிகளை செய்து தர வேண்டும் என்றும் மத்திய சுகாதார அமைச்சகமும், மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>><<<<<<

கடந்த மாதம் ஒரு லட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாய் சரக்கு மற்றும் சேவை வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டு இதே மாதத்துடன் ஒப்பிடும் போது 10 சதவீதம் அதிகமாகும்.

மத்திய அரசு 30 ஆயிரத்து 862 கோடி ரூபாயும், மாநில அரசுகள் 38 ஆயிரத்து 411 கோடி ரூபாயும் வசூல் செய்துள்ளதாக மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி மற்றும் மாநிலங்களுக்கு இடையிலான சரக்கு மற்றும் சேவை வரியாக 93 ஆயிரத்து 621 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் பரிவர்த்தனைகள் மூலம் ஒட்டுமொத்த சரக்கு மற்றும் சேவை வரி வசூல் 9 புள்ளி இரண்டு விழுக்காடு அதிகரித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான வரிவசூல் 12 புள்ளி ஒரு சதவீதம் அதாவது, 49 ஆயிரத்து 976 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் ஆகஸ்ட் மாதம் வரை 8 லட்சம் கோடி ரூபாய் சரக்கு மற்றும் சேவை வரியாக வசூலிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தை விட 10 புள்ளி இரண்டு சதவீதம் அதிகமாகும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

>>>>>><<<<<<

திறன் இந்தியா திட்டத்தின் கீழ், வாடிக்கையாளர் சேவை பிரதிநிதிகள் நியமிக்கப்படவுள்ளதாகவும் அந்தப் பணிக்கு மதிப்பூதியமாக 28 ஆயிரம் ரூபாய் வழங்கப்படவுள்ளதாகவும் வந்துள்ள செய்திகள் தவறானவை என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இந்தப் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள், பணிநியமனத்திற்கு முன்பு ஆயிரத்து 350 ரூபாய் பதிவுக் கட்டணமாக செலுத்த வேண்டும் என்று சமூகவலைதளங்களிலிருந்து வரும் செய்திகள் தவறானவை என்று மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், சான்பிரான்சிஸ்கோ பயணத்தை முடித்துக் கொண்டு இன்று சிகாகோ செல்கிறார்.

அங்கு பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்தித்து, தமிழகத்தில் தொழில் தொடங்க அழைப்பு விடுக்கவுள்ளார்.

சிகாகோ நகரில் வசிக்கும் தமிழர்கள் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சியிலும் அவர் கலந்து கொள்கிறார்.

>>>>>><<<<<<

மூத்த பத்திரிகையாளரும், எழுத்தாளருமான திரு. உமேஷ் உபாயத்யாயா நேற்று புதுதில்லியில் காலமானார். அவருக்கு வயது 64.

அவரது மறைவு உலக இதழியல் துறைக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

துயரமான இந்த தருணத்தில் அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாக சமூகவலைதளப் பதிவில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

தெற்கு தில்லியில் திரு. உமேஷ் உபாயத்யாயா இல்லத்தில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வந்த நிலையில், நான்காவது மாடியிலிருந்து அவர் கால்தவறி விழுந்து படுகாயமடைந்தார்.

மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர், சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார்.

>>>>>><<<<<<

ஐக்கிய ஜனதா தள கட்சியின் செய்தி தொடர்பாளர் பொறுப்பிலிருந்து, அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. கே.சி. தியாகி விலகியுள்ளார்.

இதையடுத்து, புதிய செய்தி தொடர்பாளராக திரு. ராஜீவ்ரஞ்சன் பிரசாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், ராஷ்ட்ரீய ஜனதா தள் கட்சியின் முன்னாள் அமைச்சரும், மூத்த தலைவருமான திரு. ஷியாம் ரஜாக் நேற்று அக்கட்சியிலிருந்து விலகி, ஐக்கிய ஜனதா தள கட்சியில் சேர்ந்தார்.

>>>>>><<<<<<

போரினால் பாதிக்கப்பட்டுள்ள காஸாவில், 6 லட்சத்திற்கும் அதிகமான குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணியை உலக சுகாதார நிறுவனம் தொடங்கியுள்ளது.

சமீபத்தில் காஸாவில் போலியோவால் ஒரு குழந்தை பாதிக்கப்பட்டதை அடுத்து, சொட்டு மருந்து வழங்கும் பணியை மேற்கொள்ள போர் நிறுத்தம் செய்யுமாறு இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்புகளை ஐ.நா கேட்டுக் கொண்டது.

இதையடுத்து, மூன்று நாட்கள் போர் நிறுத்தத்திற்கு இருதரப்பினரும் ஒப்புக் கொண்டதை அடுத்து, போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

குறுகிய காலத்திற்குள் 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படும் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் ஆடவருக்கான உயரம் தாண்டுதல் போட்டியில் இந்தியாவின் நிஷாத்குமார் 2 புள்ளி நான்கு மீட்டர் உயரம் தாண்டி, வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிருக்கான 200 மீட்டர் ஓட்டத்தில் ப்ரீத்தி பால் வெண்கலப்பதக்கம் வென்றார். இவர் ஏற்கனவே 100 மீட்டர் ஓட்டத்திலும் வெண்கலப்பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வெண்கலப்பதக்கம் வென்ற ப்ரீத்தி பாலுக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிடோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இப்போட்டியின் மகளிர் பேட்மிண்டன் ஒற்றையர் பிரிவு தங்கப்பதக்கத்திற்கான இறுதியாட்டத்தில் இந்தியாவின் துளசிமதி முருகேசன் இன்று சீனாவின் Quiu Xia Yang-ஐ எதிர்கொள்கிறார்.

முன்னதாக நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் துளதிமதி, சகநாட்டவரான மனிஷா ராம்தாஸை வென்றார்.

இன்று நடைபெறவுள்ள வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியாவின் மனிஷா ராம்தாஸ் – டென்மார்க்கின் கேத்ரினை எதிர்கொள்கிறார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் தங்கப்பதக்கத்திற்கான இறுதிப்போட்டியில் இந்தியாவின் நிதேஷ்குமார், பிரிட்டனின் பெத்தேல் டேனியலை எதிர்கொள்கிறார்.

முன்னதாக நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் நிதேஷ்குமார் - ஜப்பானின் Daisuke Fujihara –வை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு மற்றொரு இறுதியாட்டத்தில் Suhas Yathiraj – பிரான்ஸின் Lucas Mazur-ஐ எதிர்கொள்கிறார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 1 தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலம் உள்ளிட்ட 7 பதக்கங்களுடன், பதக்கப்பட்டியலில் 27வது இடத்தில் உள்ளது.

>>>>>><<<<<<

சென்னையில் நேற்று நிறைவடைந்த பார்முலா-4 கார் பந்தயத்தில் ஹைதராபாத் அணியைச் சேர்ந்த அலிபாய் முதலிடத்தையும், அஹமதாபாத் அணியின் தீவி நந்தன் இரண்டாவது இடத்தையும், பெங்களூரு அணியின் ஜேடன் பாரியாட் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.

வெற்றிபெற்ற வீரர்களுக்கு அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் பரிசுகளை வழங்கினார்.

>>>>>><<<<<<